**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி. P. கனிமொழி , L. L. M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ம் நாள் திங்கட் கிழமை
திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 23 ம் நாள்

TNMY09-002691-2024

**OS.No. 49/2024**

இளங்கோவன்

அவரது பவர் ஏஜெண்ட்

1. அழகுசுந்தரம்

2. சுப்பிரமணியன் .....வாதி

//எதிர்//

1. கலைவாணி
2. ஏலாச்சி
3. கணேசன்
4. பழனிவேல்
5. ரேணுகா ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 24.06.2024ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 30.03.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. செந்தில்அழகன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. வேலாயுத ராஜா அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்தும் போதிய வாய்ப்பளித்தும் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் கடந்த 19.10.2024 அன்று தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:05 +0530

**<u>தீர்ப்புரை :–</u>**

1ம் பிரதிவாதி அம்மாசிக்கு 31.10.1996 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள கிரய சாசனத்தில் உள்ள சொத்தின் புல எண்.172/1A 1A என்பது சரியல்ல என்றும், அந்த அடிப்படையில் மேற்படி கிரய சாசனம் ( ஆவண எண்.656/1996) செல்லாது என்றும், அது வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் விளம்பல் பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வழக்குரையின் சுருக்கம்:</u>**

2. தாவா சொத்தும், அதிகமும் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது. வாதியின் உரிமை முன்னவரான ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதியிடமிருந்து 07.04.1985ம் தேதியில் 3 ஏக்கர் 33–1/3 செண்ட் நஞ்சை நிலத்தினை பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்று ராமசாமி என்பவரிடமிருந்து வாதி 21.08.2008 தேதியில் மேற்படி நஞ்சை நிலத்தினை பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி கிரயம் பெற்ற சொத்தினை வாதி பட்டா மிராசுடன் ஆண்டு அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்து வருவாய்துறையில் சப் டிவிஷன் செய்யப்பட்டு வருவாய்துறை பதிவேடுகளில் புல எண்.172/1A1A ஹெக்.1.35.00 ஆக வாதி பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. 1ம் பிரதிவாதி அவரிடம் மீதம் உள்ள நஞ்சை நிலத்தில் 31.10.1996 தேதியில் 3530 சதுரடி மனையினை ஆவண எண்.656/1996 மூலம் 2ம் பிரதிவாதியின் கணவரும், 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்மாசி த/பெ தங்கவேல் என்பவருக்கு கிரயம் செய்தும் மேலும் 9 நபர்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி அம்மாசி இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுகளாக 2 முதல் 5 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற்படி கிரய ஆவணங்களில் வாதி பெயரில் உள்ள சொத்திற்கான புல எண்.172/1A1A எனக் கண்டு கிரய சொத்து தவறாக எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் வாதி தரப்பினர் அல்ல.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:14 +0530

4. மேற்படி விபரம் வாதிக்கு அவரது தாவா சொத்தினை கிரயம் செய்ய வேண்டி 17.03.2023 அன்று வில்லங்க சான்று எடுத்து பார்த்தபோதுதான் தெரிய வந்தது. அதன்பின்னர் வாதி வருவாய்துறையில் விசாரணை செய்தபோது வருவாய்த்துறை புல எண் புல வரைபடத்தில் தவறாக காட்டப்பட்டதாகவும், அதனை 2010ம் ஆண்டில் சரி செய்து உத்திரவிட்டதாகவும் தெரிவித்தார்கள். இதனால் வாதி அவரது சொத்தினை எவ்வித பராதீனமும் செய்ய முடியவில்லை. வாதி, கடந்த 04.09.2023 அன்று 1ம் பிரதிவாதி மற்றும் அம்மாசி என்பவருக்கும் மற்றும் 9 நபர்களுக்கும் இந்த விபரத்தினை தெரிவித்து ஒரு அறிவிப்பினை அனுப்பி உள்ளார். அதனை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுவிட்டது. அம்மாசி பெற்றுக்கொண்டு எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை. எனவே, வாதி விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

5. வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வாதி உண்மை சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும். 1ம் பிரதிவாதிக்கு தாவா கிராமத்தில் 10 ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருந்தது என்றும், அதில் ராமசாமி என்பவருக்கு 3 ஏக்கர் 33 –1/3 செண்ட் நிலத்தை கிரயம் செய்து கொடுத்துவிட்டதாகவும், மீதமுள்ள சொத்தினை பல நபர்களுக்கு பல தேதிகளில் கிரயம் செய்து கொடுத்ததாகவும், மற்ற நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்த கிரய ஆவணத்தில் புல எண். 172/1A1A என தவறாக குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுத்துள்ளதாகவும் சொல்லியுள்ளதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதி பெயரில் புல எண். 172/1A1A விற்கான பட்டாவை அவரது பெயரில் மாற்றம் செய்து தெளிவாக அனுபவித்து வருவதாகவும், 1ம் பிரதிவாதி யிடமிருந்து ஆவண எண். 656/1996 என்ற ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்ற அம்மாசி என்பவர் மேற்படி கிரய ஆவணத்தில் உள்ள புல எண்ணை திருத்தம் செய்து தரக்கோரி இதுநாள் வரை கோரவில்லை என்றும், வாதியும் 2 முதல் 5 பிரதிவாதிகளும்



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.06 13:49:22 +0530

கூட்டு சேர்ந்து 1ம் பிரதிவாதியிடமிருந்து வேறு சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி வழக்கு சொத்தை பார்வையிட வழக்கறிஞர் ஆணையரை நியமணம் செய்யக்கோரி எந்த மனுவையும் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் ஆவண எண். 656/1996 என்ற ஆவணமானது சரியானது என தெரிய வந்துவிடும் என்பதால் அவர் வழக்கறிஞர் ஆணையர் நியமணம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த வழக்கானது வாதியால் 28 ஆண்டுகளுக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கானது காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கூறியுள்ளனர்.

6. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1) **இந்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?**

2) **வாதிகோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

3) **வாதிக்கு கிடைக்கவேண்டிய இதர பரிகாரங்கள் என்ன?**

7. வாதி தரப்பில் வா.சா.1 ஆக அழகுசுந்தரம் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஆக சதீஷ்குமார் தரங்கம்பாடி வட்டாட்சியர் அவர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார். சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**எழுவினா 1 :–**

8. **இவ்வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:30 +0530

2ம் பிரதிவாதியின் கணவரும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்மாசி என்பவருக்கு கடந்த 31.10.1996 ஆம் ஆண்டு எழுதிக்கொடுத்த ஆவண எண். 656/1996 என்ற கிரய ஆவணத்தை செல்லாது என விளம்பக்கோரி 28 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது . வாதி தரப்பில் வாதி தாவா சொத்தை கிரயம் செய்வதற்காக கடந்த 17.03.2023 அன்று வில்லங்கம் சான்று எடுத்து பார்த்தபோதுதான் 2ம் பிரதிவாதியின் கணவரும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்மாசி என்பவருக்கு 1ம் பிரதிவாதி அவரிடம் மீதமுள்ள நஞ்சை நிலத்தில் 3530 சதுர அடி மனையினை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்பதும், அந்த கிரய ஆவணத்தில் வாதி பெயரில் உள்ள சொத்திற்கான புல எண்.172/1A1A எனக் கண்டு கிரய சொத்து தவறாக எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வந்ததாகவும் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

9. காலவரையறை சட்டம்பிரிவு 58 – ஆனது வழக்கு தொடரும் உரிமை முதன்முதலில் எழும் தேதியிலிருந்து அல்லது உரிமை மறுப்பு குறித்து அறிந்த தேதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் வழக்கு தொடரவேண்டும். அம்மாசி என்பவரது பெயரில் ஏற்பட்ட ஆவணம் குறித்து வாதிக்கு 17.03.2023 அன்று தான் தெரிய வந்ததாக வாதி கூறியுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் அதற்கு முன்பே மேற்படி விபரம் வாதிக்கு தெரிய வந்ததாக எந்த ஒரு பொருண்மையையும் கூறப்படவில்லை. எனவே, வாதிக்கு 17.03.2023 அன்று அம்மாசி என்பவரது பெயரில் ஏற்பட்ட ஆவணம் குறித்து தெரிய வந்துள்ள நிலையில் அதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் பிரதிவாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு காலவறையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என மேற்கண்ட எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

<u>எழுவினா 2:–</u>

**10. வாதிகோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** வாதி தரப்பில் தாவா சொத்தும்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:38 +0530

மற்ற சொத்துக்களும் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும், அதில் வாதியின் உரிமை முன்னவரான ராமசாமி என்பவர் கடந்த 07.04.1985ம் தேதியில் 3 ஏக்கர் 33-1/3 செண்ட் நஞ்சை நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றும், ராமசாமி என்பவரிடமிருந்து வாதி கடந்த 21.08.2008 தேதியில் மேற்படி சொத்தை கிரயம் பெற்று பட்டா மாற்றம் செய்து வருவாய்துறை பதிவேடுகளில் புல எண்.172/1A1A என வாதி பெயரில் உட்பிரிவு செய்து அனுபவித்து வருவதாகவும், 1ம் பிரதிவாதி அவரிடம் மீதமுள்ள நஞ்சை நிலத்தில் 31.10.1996 ல் 3530 சதுரடி மனையினை 2ம் பிரதிவாதியின் கணவரும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்மாசி என்பவருக்கு கிரயம் செய்தும், மேலும் 9 நபர்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரய ஆவணங்களில் வாதி பெயரில் உள்ள சொத்திற்கான புல எண். 172/1A1A என கண்டு தவறாக கிரய ஆவணம் எழுதிகொடுத்திருப்பதாகவும், அதனால் அந்த கிரய ஆவணத்தை செல்லாது என விளம்பும்படி வாதம் வைக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி கிரயம் பெற்ற அம்மாசி என்பவராலும், 2 முதல் 5 பிரதிவாதிகளாலும் 1ம் பிரதிவாதியிடம் கிரய ஆவணத்தில் புல எண் தவறாக குறிப்பிடப்பட்டது என்றும், அதை திருத்தம் செய்து தருமாறு கூறப்படவில்லை என்றும், வாதியும், 2 முதல் 5 பிரதிவாதிகளும் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

11. புல எண்.172/1A வில் 3 ஏக்கர் 33 – 1/3 செண்ட் நிலத்தை வாதியின் கிரய முன்னவரான ராமசாமி என்பவர் கடந்த 07.04.1985 அன்று கிரயம் பெற்றுள்ளார். அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை ராமசாமி பெயரில் புல எண். 172/1A1A என உட்பிரிவு செய்து அதை வாதிக்கு கடந்த 21.08.2008 அன்று கிரயம் செய்து கொடுத்துள்ளார். அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புல எண்.172/1A1A வில் 1 ஹெக்டேர் 35 ஏர்ஸுக்கு வாதி இளங்கோவன் பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டா வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்று வா.சா.ஆ.4 ஆக குறியீடு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:46 +0530

செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1ம் பிரதிவாதியிடமிருந்து ராமசாமி அவர்கள் புல எண்.172/1A வில் 3 ஏக்கர் 33–1/3 செண்ட்டை கிரயம் பெற்று பின்னர் அவர் கிரயம் பெற்ற சொத்திற்கு புதிய புல எண். 172/1A1A என கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், அந்த சொத்தை வாதி கிரயம் பெற்று பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்பதும் தெரிய வருகிறது. 1ம் பிரதிவாதி கடந்த 31.10.1996ல் 2ம் பிரதிவாதியின் கணவரும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்மாசி என்பவருக்கு புல எண். 172/1A1A என குறிப்பிட்டு 3530 சதுர அடி சொத்தினை கிரயம் செய்து கொடுத்துள்ளார். அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தரங்கம்பாடி வட்டாட்சியர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், "**பொறையார் கிராமம் பழைய புல எண். 172/1Aவின் மொத்த விஸ்தீரணம் 3.37.5 ஹெக்டேர். ராமசாமி பிள்ளை என்பவரது பெயரில் மேற்படி புல எண்ணானது 172 /1A1A என உட்பிரிவு செய்யப்பட்டு அதன் விஸ்தீரணம் 1.35.0 ஹெக்டேர் என அ பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது**" என சாட்சியம் அளித்துள்ளார். பொறையார் கிராம "அ" பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "**புல எண். 172 /1A வில் அம்மாசி என்பவர் பெயருக்கு அ பதிவேட்டில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி கலைவாணி பெயரில் மேற்படி புல எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் புல எண். 172 /1A3 என உட்பிரிவு செய்யப்பட்டு அதன் பிறகு மேற்படி புல எண். 172/9 என கலைவாணி, சாமிநாதன், சூர்யா ஆகியோர் பெயரில் பட்டா எண். 1580 என மாற்றப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் 1943 சதுர மீட்டர் ஆகும்**" என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் புல எண். **172 /1A**வில் 1ம் பிரதிவாதி பெயரில் புல எண். 172/1A3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, 1ம் பிரதிவாதி அவரது சொத்தை பொறுத்து கிரயம் செய்து கொடுக்கவேண்டுமெனில் புல எண். **172/1A3** என குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவர் வாதிக்கு பாத்தியப்பட்ட புல எண். 172 / 1A1A என குறிப்பிட்டு அம்மாசி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார். 1ம்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.06 13:49:53 +0530

பிரதிவாதிக்கு புல எண்.172/1A1A வில் சொத்துக்கள் இருந்தது என்பதற்கான எந்த ஆவணங்களையும் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், தான் சரியான புல எண்ணை குறிப்பிட்டுத்தான் சொத்தை கிரயம் செய்து கொடுத்ததாக 1ம் பிரதிவாதி தரப்பில் கூறப்படவில்லை. எனவே, வாதிக்கு பாத்தியப்பட்ட புல எண்ணை குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி அம்மாசி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளதால் அந்த கிரய ஆவணம் செல்லாது என வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>எழுவினா 3:-</u>

12. வாதிகோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று மேற்கண்ட எழுவினாவில் முடிவு காணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

13. **முடிவாக,** 1ம் பிரதிவாதி அம்மாசிக்கு 31.10.1996 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள ஆவண எண்.656/1996 என்ற கிரய சாசனத்தில் உள்ள சொத்தின் புல எண்.172/1A 1A என்பது சரியானது அல்ல என்ற அடிப்படையில் மேற்படி கிரய சாசனம் செல்லாது என்றும், அது வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் வாதி கோரிய விளம்பல் பரிகாரம் வாதிக்கு அளித்து வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.04.2026 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.06 13:49:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**பின் இணைப்பு:-**

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 - அழகுசுந்தரம்

வா.சா.2 - சதீஷ்குமார் ( வட்டாட்சியர் தரங்கம்பாடி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 07.04.1985 தேதியிட்ட ராமசாமி என்பவருக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ2 | 21.08.2008 தேதியிட்ட வாதிக்கு ராமசாமி எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ3 | வாதி பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 31.10.1996 தேதியில் அம்மாசி என்பவருக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 04.09.2023 அன்று வாதி, பிரதிவாதிகளுக்கும் மற்ற நபர்களுக்கும் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | மேற்படி அறிவிப்பை அம்மாசி என்பவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை

**சாட்சிய சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| சா.சா.ஆ1 | பொறையார் கிராம "அ" பதிவேட்டின் உண்மை நகல் |
| சா.சா.ஆ2 | புல எண்.172ற்கான கிராம புல வரைபடத்தின் உண்மை நகல் |
| சா.சா.ஆ3 | 29.10.2010 தேதியிட்ட தரங்கம்பாடி வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகளின் உண்மை நகல் |

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.06 13:50:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி